மாதர் போதினி

No. 257 ஜூன் 1919 No. 6

SILENCE

அமைதி

‘நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்.’ அமர்ந்திருப்பதுதான் தேவனை அறியும் வழி. ‘தேவன் தமது பரிசுத்த ஆலயத்திலிருக்கிறார்; பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக்கடவது.’

இருபது வருஷங்களுக்குமுன் ஒரு சிநேகிதன் எனக்கு ஒரு புஸ்தகங் கொடுத்தார். அது என் ஜீவிய மாறுதலுக்கு ஏதுகரமாயிற்று அப்புஸ்தகத்தின் பெயர் ‘மெய்ச் சமாதானம்.’ தேவன் என் ஜீவிய ஆழத்திலிருந்து என்னோடு பேசுகிற ஓர் விசேஷித்த கேள்வியென்னவென்றால் ‘நீ என் சப்தத்தைக் கவனிக்க அமர்ந்திருக்கமாட்டாயா?’ என்பதே.

இது மெத்த சுலபமான காரியமென்றெண்ணி அமைதியாயிருக்கத் துவங்கினேன். இப்படிச் செய்யத் தொடங்கினவுடனே உள்ளிருந்தும் வெளியிருந்தும் ஆயிரக்கணக்கான சத்தங்கள் எழும்பி என்னைக்குழப்பி பெரிய இரைச்சலை உண்டாக்கினதன்றி வேறொரு பயனுமுண்டாகவில்லை. அந்த இரைச்சலில் சில என் சொந்த சத்தமாகவும், சில என் மனதின் கேள்விகளாகவும், சில என் சொந்தக் கவலைகளாகவும், மற்றும் சில என் ஜெபங்களாகவும், இன்னும் பல சோதனைக்காரனுடைய ஏவுதல்களாகவும், உலக எண்ணங்களாகவுமிருந்தன. செய்யவும், பேசவும் நினைக்கவும் அநேக காரியங்களிருந்ததாகத் தோன்றிற்று. நாளுவிதத்திலும் சொல்லமுடியாத அநேக காரியங்களால் இழுக்கப்பட்டு சிக்குண்டேன். சிலவற்றைக் கவனிக்கவும் சிலவற்றிற்கு மறுமொழி பகரவும் வேண்டியதென்று எனக்குத் தோன்றிற்று. ஆனால் தேவனோ ‘நீ அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்துகொள்’ என்றார். பின் மறுநாளைக்குரிய எண்ண்ங்களும், கடமைகளும் கவலைகளும் என்னை நெருக்கிற்று. ஆனால் தேவனோ ‘அமர்ந்திரு’ என்றார். நான் தேவன் என்னோடு பேசுவதைக கூர்ந்து கவனித்து கீழ்ப்படியக் கற்றவுடனே மற்ற சப்

தங்களும் இரைச்சல்களும் ஒருவாறாய்த் தணிந்து, அவைகளின் சப்தங்கேளாமல் அமர்ந்த மெல்லிய சப்தமாய் ஒருவர் என்னோடு பேசுவதைக் கேட்டேன். அது சொல்லக்கூடாத சாந்தமும் வல்லமையுமுடையதாய் ஆறுதலைத் தந்தது. நான் கவனித்துக்கேட்கவே, அது ஜெபசப்தமாகவும், ஞானத்தின் சப்தமாகவும், கடமையின் சப்தமாகவுமாகி, ஜெபிப்பதும், தியானிப்பதும் விசுவாசிப்பதும் முன்போல் கஷ்டமாயிராமல் சுலபமாகி, பரிசுத்தாவியானவரே எனக்குள்ளிருந்து ஜெபித்து என் மனதிலுண்டான ஐயங்களை நீக்கி என் ஆத்துமாவையும் சரீரத்தையும் பலப்படுத்தி ஜீவனுள்ள தேவனே எனக்கு எல்லாவற்றிலும் எல்லாமானார். என் ஜீவியத்தில் நிறைவும் ஆறுதலும் மெய்ச்சமாதானமும் என்னைப் பரவசப்படுத்திற்று.

இதுவே நமது ஆத்துமாவுக்கு முக்கியமாய் வேண்டியது. இவ்விதமாய் நாம் தேவனை அறியக் கற்றுக்கொள்ளுகிறோம். இவ்விதமாகவே ஆத்தும போஷிப்பும் முசிப்பாறுதலுங் கண்டடைகிறோம். நமது இருதயம் ஜீவ அப்பத்தால் திருப்தியடைகிறது, நமது சரீரம் சுகப்படுகிறது, நமது ஆத்துமா உயிர்த்தெழுந்த கர்த்தரின் ஜீவனால் தாகந்தீர்ந்து, இரவின் அந்தகாரத்தில் குளிர்ந்த பளிங்குபோன்ற பனியை உண்டு செழித்த புஷ்பத்தைப்போல் களிக்கும். புயலான இரவில் பனி பெய்யாததுபோல் தேவ அருள் என்ற பனி அமைதயில்லா இருதயத்தில் இறங்காது.

நமது ஜீவியத்தில் தேவனோடு தனித்திருக்கும் நேரங்களும், உன்னதமானவரின் மறைவும் தேவனை நோக்கிக் காத்திருக்கும் சமயங்களு முண்டானால், நமது பெலன் புதுப்பிக்கப்பட்டு, கழுகுகளைப்போல் செட்டையடித்துப் பறந்து ஓடினாலும் இளைப்படையாமலும் நடந்தாலும் சோர்ந்துபோகாமலு மிருக்கலாம்.

'அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும்.'

A Translation.

GOD IS ABLE

தேவன் வல்லவர்

1. எரிகிற அக்கினிச் சூளையினின்று விடுவிக்க வல்லவர். தானி. 3. 13-18.

2. சிங்கத்தின் வாயினின்று விடுவிக்க வல்லவர். தானி. 6. 18-24.

3. சகலவித அசுத்தங்களினின்று விடுவிக்க வல்லவர். எசே. 36. 29.

4. நம்முடைய பாவங்களை நீக்கி இரட்சிக்க வல்லவர். மத்.1.21.

5. மரணத்திலிருந்து விடுவிக்க வல்லவர். எபி. 5. 7.

6. முற்றமுடிய இரட்சிக்க வல்லவர். எபி. 7. 25.

7. சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவர். எபி. 2. 18.

8. நிலை நிறுத்த வல்லவர். ரோம. 14. 4.

9. ஸ்திரப்படுத்தி தீமையினின்று விலக்கிக் காக்க வல்லவர். 2 தெச. 3. 2.

10. வழுவாதபடி காக்க வல்லவர். யூதா. 24.

11. தமது சந்நிதானத்தில் மாசற்றவர்களாய் நிறுத்த வல்லவர். யூதா. 24.

12. அவரிடம் ஒப்புவித்ததைக் காத்துக்கொள்ள வல்லவர். 2 தீமோ. 1. 12.

13. தமது வாக்குத்தத்தங்களையெல்லாம் நிறைவேற்ற வல்லவர். ரோம. 4. 21.

14. நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கதிகமாய்ச் செய்ய வல்லவர். எபே. 3. 20.

15. சகல கிருபைகளும் பெருகச்செய்ய வல்லவர். 2 கொரி. 9. 8.

16. சகலத்தையும் தமக்குக் கீழ்ப்படுத்த வல்லவர். பிலி. 3. 21.

17. மரித்தோரை எழுப்ப வல்லவர். எபி. 9. 19.

CHILDREN'S PAGE

BIBLE PUZZLES

வேத விடுகதைகள்

1. கொலையுண்ட ஏழு மனிதரின் சரீரங்களைக் காத்த பெண் யார்?

2. ஒரு கிரேக்கனை மணஞ்செய்த கிறிஸ்தவ யூதஸ்திரீ யார்.

3. தான் ஜெயித்த ஜாதியாரிடம் பொன்கடுக்கன்களைக் கேட்டு வாங்கின தளகர்த்தன் யார்.

4. தூதரால் பிறப்பு முன்னறிவிக்கப்பட்டுப் பிறந்தவர் எவர்?

5. உறைந்த மழை பெய்திருக்கையில் ஓர் சிங்கத்தைக் கொன்றவன் யார்?

6. சிங்கத்தைக் கொன்ற மூவர் எவர்?

7. தன் கை சலித்து பட்டயத்தோடு ஒட்டிக்கொள்ளுமட்டும் விடாமல் யுத்தஞ்செய்த போர்வீரன் யார்?

PRAYER

ஜெபம்

'ஆண்டவரே! ஜெபம்பண்ண எங்களுக்குப் போதித்தருளும்.' (லூக்கா 11 : 1.)

I. நாம் ஜெபிக்கவேண்டியதேன்? நமது ஜெபமின்றி தேவன் கிரியை செய்கிறதில்லையா?

தேவன் கிரியை செய்யாமல், ஜெபம் அதாவது விருப்பம் நம்மில் உண்டாகிறதில்லை. 'தேவனே, தமது தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.' அவர் அவ்விதமாய் நல்விருப்பங்களை உண்டாக்குகிறபடியால்தான் நாம் ஜெபிக்கவேண்டும். அவர் அப்படிச் செய்யாவிட்டால் ஜெபிப்பது வீண். தேவனே வாஞ்சையை உண்டாக்குகிறார். அவரே அதைத் திருப்தியாக்கவுஞ் செய்கிறார். அவர் விருப்பத்தை உண்டாக்காவிடின் யார்தான் ஜெபிப்பான்? அவரே வாஞ்சையை உண்டாக்குவதால் அவரே அதைத் தீர்க்கும்படி அது அவரிடமே கொண்டுவரப்படவேண்டும்.

மனுஷருக்கு இயல்பாய் நல் விருப்பமேயில்லை. சகல நல் விருப்பங்களுக்கும் தேவ ஆவியானவரே காரணர். தேவ ஆவியானவர் நல் விருப்பங்களை உண்டுபண்ணாத ஒரு இருதயமுமில்லை. ஆயினும் மனுஷன் தன் மாம்ச சுபாவத்துக்குச் சாய்ந்துபோவதால் அந்த நல் விருப்பங்களை அழித்துவிடுகிறான்; அல்லவென்றால் வேறுவிதமாய் நிறைவேற்றிக்கொள்ளப் பிரயாசப்பட்டும் சித்திபெறாமற் போகிறான். கர்த்தரிடம் கொண்டுவருபவனின் வாஞ்சையோ அவரால் திருப்திபண்ணப்படுகிறது.

நாம் ஜெபம் பண்ணும்போது, தேவன் நமக்கு இரங்கும்படி நாம் அவருடைய உள்ளத்தை மாற்றுகிறதில்லை. அவர் உள்ளம் நாம் ஜெபிக்குமுன் எப்படியோ அப்படியே ஜெபித்த பின்னும், நமக்கு இரங்கவே எப்போதும் வாஞ்சைகொண்டிருக்கிறது. நாம் ஜெபிப்பதால் அவருக்கில்லாத வாஞ்சையை புதிதாய் நாம் உண்டாக்காமல் நமக்கு இருக்கிற வாஞ்சையையே அவரிடம் வெளியிடுகிறோம். அப்படி வாஞ்சிக்கும்போது அவர் நமக்கு இரக்கம் பாராட்டக்கூடிய நிலைமையில் வந்து சேருகிறோம். ஆகையால் நாம் ஜெபிக்காவிட்டால் ஆவிக்குரிய நன்மைகளைப் பெற்றுக்கொள்வது கூடாதகாரியம்.

'கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்.' (மத். 7 : 8.)

'நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே பெற்றுக்கொள்ளுகிறதில்லை.' (யாக். 4 : 2.)

ஒன்றில் நன்மை பெறவேண்டியவன் ஜெபிக்கவேண்டும். அல்லவென்றால் அவனுக்காக மற்றவர்கள் ஜெபிக்கவேண்டும். திமிர்வாதக்காரனைச் சுமந்து வந்தவர்களினிமித்தம், அவனுடைய பாவத்தை மன்னித்து, ரோகத்தையும் தீர்த்துவிட்டார். யவீருவின் விண்ணப்பத்துக்கு அவன் மகளையும், மார்த்தாள் மரியாளுடைய வேண்டுதலுக்கு லாசருவையும் உயிரோடெழுப்பினார்.

குணப்படாத இந்தியாவும், இலங்கையும், தன் மரண நிலைமையை உணருவதுமில்லை, தனக்காக ஜெபிப்பதுமில்லை. அதின் பரிதாபமான நிலைமையை அறிந்த குணப்பட்ட சகோதரனே! நீயே அவர்களுக்காக வாஞ்சையுடன் கர்த்தரிடம் ஜெபிக்கவேண்டும் உன் விசுவாச, ஊக்கமான வேண்டுதலைப் பார்த்து கர்த்தர், உயிரடையும் என்ற நம்பிக்கையற்ற இந்த உலர்ந்த எலும்புகளை உயிர்ப்பிக்கவேண்டியதாயிருக்கிறது. ஆகையால் இந்தியாவின் திரள் ஜனங்களுக்காக கர்த்தர் இதை அநுக்கிரகிக்கும்படி, நீ அவரிடத்தில் ஊக்கமாய் விண்ணப்பம் பண்ணவேண்டும். (எசேக். 36 : 24-36). மற்றப்படி தேவன் வாக்கு பண்ணினபோதிலும், நீ ஜெபியாமற்போனால் இது நிறைவேறுவது கூடாதகாரியம். ஏனெனில் கர்த்தருடைய வாக்குகளெல்லாம் ஜெபிக்கிறவர்களுக்கே பலிக்கிறது. ஜெபியாதவர்களுக்கு வாக்கு பண்ணப்படாதது போலாம். எழுபது வருஷ சிறையிருப்பின் பின் கர்த்தர் இஸ்ரவேலரை மீட்பதாக[illegible]கு பண்ணியிருந்தபோதிலும் தானியேல், நெகேமியா முதலான[illegible]கள் அதற்காக உபவாசம்பண்ணி, இரட்டுடுத்தி, சாம்பலிலும் உட்கார்ந்து, தங்களைத் தாழ்த்தி, சிறுமைப்படுத்தி, தங்கள் பாவத்தையும், இஸ்ரவேலர் பாவத்தையும் அறிக்கையிட்டு, புலம்பிக், கெஞ்சவேண்டியதாயிருந்தது.

அதுபோல எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படுவது தமது சித்தம் என்று கர்த்தர் தமது திருவசனத்தில் வெளிப்படுத்தியிருந்தபோதிலும், அந்த தேவசித்தம் நமது நாட்டிலும் நிறைவேறவேண்டும் என்று நாமும் ஆவலுடன் ஜெபியாவிட்டால் அது நிறைவேறுவதெப்படி? விசுவாச வாஞ்சையுடன் கர்த்தரிடம் விண்ணப்பஞ் செய்யாத மனுஷன் தான் கர்த்தரிடத்திலிருந்து எதையாகிலும், தனக்கானாலும் பிறருக்கானாலும், பெறலாமென்று நினையாதிருப்பானாக. எங்கே ஜெபத்தின் ஆவியும், விண்ணப்பங்களின் ஆவியும் ஊற்றப்பட்டிருக்கிறதோ, அங்கேயே உயிர்ப்பிக்கும் தேவ ஆவியானவர் ஊற்றப்படுகிறார்.

ஆகையால் சகோதரனே! நமது நாட்டில் ஜெபத்தின் ஆவியும் விண்ணப்பங்களின் ஆவியும் ஊற்றப்பட்டிருக்கிறதா? அப்படியானால் நிச்சயமாய் நமது தேசம் உயிர்ப்பிக்கப்படும். விசேஷித்த காலங்களில் மாத்திரமல்ல, 'நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்கு இரக்கஞ் செய்யும்வரைக்கும்' 'இடைவிடாமல்' 'அவரை அமர்ந்திருக்கவிடாமல்' ஜெபிக்கக்கடவோம்.

II. யாருக்காக ஜெபிக்கவேண்டியது அவசியம்?

அநேகர் அதற்கு உத்தரவாக, 'இந்துக்கள், மகமதியர், புத்தர் முதலிய சமயத்தார் கிறிஸ்துமார்க்கத்துக்கு வரும்படி ஜெபிப்பது அவசியம்' என்று சொல்லலாம். இது சரியல்ல. ஏனெனில் பேருக்கு கிறிஸ்து மார்க்கத்துக்கு வருவது, கிறிஸ்துவுக்குரியவனாவதல்ல (ரோம. 8 : 9). அதினால் தேவ சித்தம் நிறைவேறிப்போகவுமில்லை. ஒவ்வொருவரும் புது சிருஷ்டியாவதே காரியம் (கலா. ு : 15). பழையவைகள் ஒழிவதும், எல்லாம் புதிதாவதும் (2 கொரி. 5 : 17). கிறிஸ்தவர்கள் அனைவரும் (2 தீமோ. 2 : 19). புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்வதுமே (ரோ. 6 : 4). பிதாவின் சித்தம் (1 தெச. 4 : 3). இதுவே நாம் அழைக்கப்பட்ட பரிசுத்த அழைப்பின் நோக்கம் (1 பேது. 1 : 15). இந்த நோக்கம் நம்மில் நிறைவேறவில்லையானால் நாம் தேவனுடைய ராஜயத்தைக் காண்பதில்லை (யோவா. 3 : 3, 5).

சகோதரனே! தேவ வசனத்தின்படி கிறிஸ்தவர்களாகாத அநேகர் தங்களைக் கிறிஸ்தவர்களென்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் ...ர்கள் தங்களைக் கிறிஸ்தவர்களென்று எண்ணிக்கொண்டதினாலே ...யாகள் கிறிஸ்தவர்களாகிறதில்லை. தேவன் அவர்களைக் கிறிஸ்தவர்களென்று ஒப்புக்கொள்ளாவிடில் அவர்கள் கதி என்னமாய் முடியும்? (மத். 7 : 21-23 வாசித்துப்பார்). ஆகையால் சகோதரனே! கர்த்தருடைய வசனத்தின்படி கடைசிநாளில் நடக்கப்போகிற நீதியான தீர்ப்பின்படி (யோவா. 12 : 48) நாம் ஒவ்வொருவரும் நம்மை நாமே இப்பொழுதே நிதானித்து அறியக்கடவோம் (1 கொரி. 11 : 31).

சகோதரனே! கர்த்தருடைய வேதத்தை அறியாத புறமதஸ்தருக்காக ஜெபிப்பதிலும், வேதத்தின்படி நடவாத பேர்க்கிறிஸ்தவ ஜனங்களுக்காக ஜெபிப்பது அதிக அவசியம். ஏனெனில் புறமதஸ்தர் குணப்படுவதற்கு பேர்க்கிறிஸ்தவர்களே தடை. ஏனெனில் அவர்கள் நமது வேதத்தைக் கவனிப்பதிலும் நமது நடக்கையையே அதிகமாய் உற்று கவனிக்கிறார்கள். அவர்கள் நம்மில் அநேகருடைய துர்நடக்கையைப் பார்த்து கிறிஸ்துவைக்குறித்து இடறலடைகிறார்

கள். நமது பரிசுத்த நடக்கையாகிய வெளிச்சம் அவர்கள் கண்கள் காண வீசுகிறது மெய்யானல், கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளியண்டை அவர்கள் வருவதும் நிச்சயம். ஓர் சமுத்திரக்கரையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஓர் தீப வெளிச்சக் கண்ணாடியைச் சுற்றி ஏராளமான பூச்சிகள் ஓர் இரவு வந்து மொய்த்துக்கொண்டு அதின் பெரிய வெளிச்சத்தை மறைத்துவிட்டபடியால் அன்றிரவு கடலில் ஓடின அநேக கப்பல்கள் பாறையில் மோதி நாசமாயின. அதுபோல மறுபடியும் பிறவாதவர்கள் சபையில் வந்து சேர்ந்து, சபையின் மத்தியில் உலாவுகிற பெரிய வெளிச்சமாகிய மகிமையின் கர்த்தரை மார்க்கந்தப்பி அலேகிற ஏராளமான புறமதஸ்தருக்கு மறைத்துவிடுகிறபடியால், அவர்கள் ஆத்துமாவாகிய கப்பல்கள் பாவப் பாறைகளில் மோதி சேதமாயின. ஐயோ! இதற்குமுன் கெட்டுப்போனவைகளே யல்லாமல் இன்னும் எத்தனையோ நாசமடையும் நிலைமையிலிருக்கின்றன!

சகோதரனே! சபை உயிர்ப்பிக்கப்படவேண்டும். நாம் சபையினிமித்தம் புலம்பி இயேசுவின் பாதத்தைக் கண்ணீரால் நனைத்து வாஞ்சையுடன் கெஞ்சுவோமாக.

ஆ! நமது நாட்டின் ஊழியர் யாவரும் மறுபடியும் பிறந்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று ஊழியஞ் செய்வார்களானல் சபை அதிசீக்கிரம், நிச்சயமாய் உயிர்ப்பிக்கப்படும். இந்நாடு முழுவதும் அசைக்கப்படும்.

பின்னும் இவையெல்லாவற்றிலும் விசேஷமாக ஜெபிக்கவேண்டிய பெரிய காரியமொன்றுண்டு. அதாவது நமது நாட்டின் விசுவாசிகளுக்காக ஜெபிப்பதே. ஏனெனில், தமது பிள்ளைகள் மூலமாய் உலகத்தை ஆசீர்வதிப்பதே, ஆதிமுதல் இதுவரையும் தேவனுடைய நடத்துதலாக இருக்கிறது. இந்தச் சத்தியத்தை ஆதியாகமம் முதல் காணலாம்.

இவர்கள் தேவசமுகம் கிட்டிச் சேருவதால், கிறிஸ்துவின் சாயலாக மறுரூபமடைந்து இவர்களே அவரை உலகத்துக்கு வெளிப்படுத்துகிறவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருக்குப் பயந்து நடப்பதால் தேவ ரகசியங்களை அறிந்து இவர்களே உலகத்துக்கு தேவசித்தத்தை அறிவிக்கிறவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தாவுக்கு தங்களை முற்றும் ஒப்புக்கொடுப்பதால், ஆவியினல் நிறைந்து, திவ்ய அன்பினல் பொங்கி, தங்கள் ஜீவனையும் பெரிதென்று பாராமல் உலகம் ரட்சிக்கப்படும்படி இவர்களே கிரியை செய்கிறவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் இப்படிப்பட்டவர்களே நமது நாட்டின் நம்பிக்கை. இவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டால் நமது நாடு ஆசீர்வதிக்

கப்படும். இவர்கள் தங்கள் ஆத்துமாவில் என்ன அளவான ஆசீர் வாதங்களைப் பெற்று அநுபவிக்கிறார்களோ அதே அளவாய்மாத்திரம் அவர்கள் மூலமாய் மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். வாய்க் காலில் செல்லும் தண்ணீரின் அளவே வயலில் செல்லும் தண்ணீ ரின் அளவு.

சகோதரனே! என்ன அளவான ஆசீர்வாதத்தைக் கர்த்தரிடத்தி லிருந்து அவருடைய பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளப் போகி றாய்? நீ தேவனிடத்தில் கேட்கிறபடியால் பெரிய காரியத்தை விசுவாசத்துடன் கேட்பாயாக. 'தேவனே! பூமியில் உம்முடைய வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய ரட்சண்யமும் விளங்கும்படியாய், தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர் வதித்து, உமது முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்.'

தேவனுடைய பிள்ளையே! உன் மூலமாய் இந்தியா இலங்கை யையும் உயிர்ப்பிக்க உன் பிதா சித்தமாயிருக்கிறார். நீ இருக்க கர்த் தர் விரும்பும் நிலைமையிலிருப்பாயானால் இதற்குமுன் எத்தனை பெரிய நன்மைகள் உன் மூலமாய் உண்டாகியிருக்கும். நீ உன் ஜீவியத்திலும் ஊழியத்திலும் எவ்வளவாய்ப் பெருகுகிறாயோ அவ்வள வாய் உன்னால் ஆசீர்வாதமும் பெருகும். நீ எவ்வளவாய்க் குறை கிறாயோ அவ்வளவாய் உன்னால் வரும் ஆசீர்வாதமும் குறையும். ஆகையால் முதலாவது நீ உன்னையே கர்த்தர்முன் தாழ்த்துவாயாக. உலகத்தைவிட்டும், சுயசித்தத்தைவிட்டும், பாவத்தைவிட்டும் முற்றும் பிரிந்துவிடுவாயாக (2 கொரி. 6 : 17–7 : 1); (வெளி. 18 : 4). உன் ஜீவனாகிய கிறிஸ்துவுடன் இசைந்து அவருடன் ஒரே ஆவி யாகி, கிரியை செய்வாயாக. ஆவியினால் நிறைந்து, தேவஅன்பி னால் பொங்கி, கனிந்து ஜெபித்து, துணிந்து உலகத்தை ஜெயித்து, உன் மீட்பர் சென்ற பாதையையே மனப்பூர்வமாய்த் தெரிந்து கொண்டு, இழந்துபோனதை அவருடன் தேடி இரட்சிப்பாயாக. அப்போது மெய்யாய் மாம்சமான யாவரும் அவருடைய ரட் சிப்பைக் காண்பார்கள். தேவநாமம் மகிமைப்படும்.

III. எவரும் ஜெபிக்கக்கூடுமோ? ஜெபிக்கவேண்டியது யார்?

கர்த்தரோடு சரியாயிராத எவனும் ஜெபிக்க முடியாது. ஜெபித் தாலும் ஜெபம் கேட்கப்படமாட்டாது. தான் சரியாயிராதவன் எப் படி மற்றவர்களுக்காக ஜெபிக்கலாம்? தன் பாவத்தை விட்டு விலக மனமில்லாமல் ஜெபிக்கிறவனுடைய ஜெபம் ஜெபமல்ல. அது தேவபார்வையில் 'மாயம்' என்று எண்ணப்படுகிறது. கிரியை யில் அநியாயக்காரராயிருந்து, பார்வைக்காக நீண்ட ஜெபம் பண்

ணினவர்களை 'மாயக்காரரே' என்று கர்த்தர் அழைத்தார் (மத். 23 : 14). 'தங்கள் உதடுகளினால் என்னிடத்தில் சேருகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது' என்கிறார். நீ! கர்த்தருக்குப் பிரியமானவனா? அப்போது மாத்திரம் உன் ஜெபம் கர்த்தருக்குப் பிரியம். கர்த்தர் தானியேலைப்பற்றி சொல்வதைக் கேள். 'தானியேலே! நீ மிகவும் பிரியமானவன். ஆதலால் நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது' என்றார். நீ எத்தனையோ ஜெபம் செய்துவருகிறாயே! ஏன் உன் விண்ணப்பங்களுக்கு உடனே உத்தரவு வெளிப்படுகிறதில்லை? தாவீது சொல்வதைக் கேள். 'என் இருதயத்தில் அக்கிரம சிந்தைகொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவிகொடார்' (சங். 66 : 18, 19). கண் திறக்கப்பட்ட பிறவிக் குருடன் சொல்வதைக் கேள். 'பாவிகளுக்கு (அதாவது, பாவத்தைப் பேணிக்கொள்பவர்களுக்கு) தேவன் செவிகொடுப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தெய்வபக்தி யுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவர் அவனுக்குச் செவிகொடுப்பார்' (யோவா. 9 : 31) என்றான். இயேசு, 'பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறேன்' என்றும் (யோவா. 8 : 29) பிதாவைப்பற்றி, 'நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்' என்றும் (யோவா. 11 : 42) சொல்லுகிறார்.

சகோதரனே! ஜீவியமும் ஜெபமும் ஒன்றாகப் பொருந்தியிருக்கிறது. (பரிசுத்த) ஜீவியம் இல்லையானால் (சரியான) ஜெபமும் இல்லை. பாவத்தை வெறுக்கிறவனின் ஜெபமே ஜெபம் (நீதி. 15:8)

ஐயோ! நமது நாட்டில் மாயமான ஜெபங்கள் எத்தனை ஏராளம்! கர்த்தர் அவைகளுக்கு சீக்கிரம் முடிவைக் கட்டளையிடுவாராக. உத்தம ஜெபம் பண்ணப்படும்போதுதான் நமது நாடு ஆசீர்வதிக்கப்படும்.

அநேகர், இந்நாட்களில் 'தங்கள் பரிசுத்தமான கைகளை உயர்த்தி எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ணவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார்.' (1 தீமோ. 2 : 8.)

IV. யாருக்கு ஜெபிக்கத் தெரியும்?

மனுஷர் ஒருவருக்கும் இயல்பாய் ஜெபம் இன்னதென்று தெரியாது. ஜெபிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டியவர் தேவஆவியானவரே. தேவாவியானவரால் போதிக்கப்பட்டாலன்றி ஜெபிக்க மனுஷனுக்குத் தெரியாது. 'நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்

டியது இன்னதென்று அறியாதிருக்கிறோம்' (ரோம. 8: 26). இது மெய்யாய் குணப்பட்டவர்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. அப்படியானால் இருதயம் மாறாதவர்களுக்கு ஜெபிக்கத் தெரிவதெப்படி?

மாம்ச சிந்தையுள்ளவர்கள் ஜெபம் தன்னயமானது. தானும், தன் குடும்பமும் க்ஷேமமாயிருக்கவேண்டும் என்பதே அவர்கள் வாஞ்சை, அவர்கள் வேண்டுதல். ஆவிக்குரியவனோ கர்த்தருக்கானவைகளையே கேட்கிறான். ஜெபம் எப்போதும் தன்னயமற்றது. ஆகையால் தன்னையும், தன் சுயஆசை, விருப்பம் இவைகளையும் சிலுவையில் அறைந்துபோட்டவனே கர்த்தருக்குப் பிரியமாய் ஜெபிக்கிறவன். மற்றப்படி அவன் தேவனுக்குப் பிரியமானதையல்ல தனக்கே பிரியமானதைக் கேட்பான்.

மனுஷர் யாவரும் பொதுவாய் தற்பிரியர். இயேசு ஒருவரே தேவப்பிரியர். அவர் ஒருவரே தமது சுயசித்தத்தை முற்றும் வெறுத்து, தமது பிதாவின் சித்தத்தின்படியே பேசினார், ஜெபித்தார், கிரியை செய்தார், சகலத்தையும் நிறைவேற்றினார். ஆகையால் அவர் ஜீவியம் தன்னயமற்றதாயிருந்தது. ஆகையால் அவர் ஜெபமும் தன்னயமற்றதாயிருந்தது. பிதாவின் சித்தமே நிறைவேற வாஞ்சித்தார், மரித்தார்.

சகோதரனே! நீயும் உன் சித்தமல்ல, பிதாவின் சித்தம் நிறைவேற வாஞ்சிக்கிறாயா? ஜெபிக்கிறாயா? அதையே அவரைப்போல் உனக்குப் போஜனமும் பானமுமாக்கிக்கொண்டாயா? எல்லாரும் இரட்சிக்கப்பட தேவன் சித்தமாயிருக்கிறாரே! நீயும் அந்த சித்தம் நிறைவேற வாஞ்சையுடன் ஜெபிக்கிறாயா? இயேசு ஒருவரே எப்போதும் சரியாய் ஜெபித்தார். நீயும் அவரிடம்போய் கற்றுக்கொள்.

'ஆண்டவரே! ஜெபம்பண்ண எங்களுக்குப் போதித்தருளும்.'

V. ஜெபமாவது என்ன?

வெறும் வார்த்தை ஜெபமேயல்ல. இருதய வாஞ்சையே ஜெபம். 'நீ விரும்புவதை என்னிடத்தில் கேள்' என்கிறார். இருதயத்தில் விருப்பமின்றி, வாஞ்சையின்றி கேட்பது யாவும் வீண்ஜெபம். 'நீங்கள் ஜெபம் பண்ணும்போது வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்' என்கிறார். 'தேவசமுகத்தில் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக' (பிர. 5: 2). ஆனால் உன் வாஞ்சையோ பெருக்கமாயிருப்பதாக. கர்த்தர் நமது வார்த்தைகளுக்குத்தக்கதாக அல்ல நமது வாஞ்சைக்குத்தக்கதான நன்மைகளை அருளுகிறார். ஒருவன்

மற்றவர்களைப்போல் நல்ல வார்த்தைகளினால் இன்பமாய் ஜெபியாமல் திக்கித்திக்கி ஜெபித்தபோதிலும் வாஞ்சையுடன் கேட்பதுண்டானால் நிச்சயமாய் அவன் ஜெபம் கேட்கப்படும். வாஞ்சையையே கர்த்தர் திருப்தியாக்குகிறார்.' தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்குகிறார்.'

மேலும் வார்த்தையில்லாத ஜெபமுமுண்டு. மட்டுக்கு மிஞ்சின வாஞ்சைக்கு வார்த்தையே இல்லை. ஏனெனில் வார்த்தைகளினால் அவ்வாஞ்சையை வெளிப்படுத்த முடியாது. வார்த்தை, வாஞ்சை இன்னதென்று காட்டுமே ஒழிய வாஞ்சையின் அளவை ஒருபோதும் காட்டாது. வாஞ்சையின் பெருக்கினால் வார்த்தை பேசமுடியாமல் கிரியையினால் மாத்திரம் காட்டக்கூடும். கண்ணீர்களும், பெருமூச்சும், அழுகையுமே அதைக் காட்டும். ‘இயேசு பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணினார்.' ‘ஆவியானவர் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.' வார்த்தைகளினால் வெளிப்படுத்தக்கூடாத பெருமூச்சுகளே அவர் வேண்டுதல். பரிசுத்தவான்களும் இவ்வித பெருமூச்சுகளுடன் தேவநாமத்தின் மகிமைக்காகக் கெஞ்சுகிறார்கள்.

‘இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிட்ட சத்தம் தேவசந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டார்.'

சகோதரனே! நமது நாட்டில் கொடிய பாவ அடிமைத்தனத்தினிமித்தம் நீ தவித்து முறையிட்டுக்கொண்டிருக்கிறாயா? உன் முறையிடுதலும், உன் பெருமூச்சும், கண்ணீர்களும் தேவசந்நிதியில் எட்டத்தக்கதாய் இருக்கிறதா? அவர்கள் விடுதலையாக வாஞ்சித்தது போல நீயும் இவர்கள் விடுதலையையே வாஞ்சித்துக் கெஞ்சுகிறதுண்டா?

இயேசு நாற்றமெடுத்த லாசருவின் கல்லறையண்டை நின்று ஆவியிலே கலங்கி, துயரடைந்து கண்ணீர்விட்டாரே!

ஆண்டுகளாய் பாவங்களினால் செத்து, நாற்றமெடுக்கும் இந்நாட்டுக்காக உன் ஆவி கலங்கவில்லையா? உன் ஆத்துமம் துயரடைகிறதில்லையா? ஐயோ! உன் கண்களில் கண்ணீர் ததும்புகிறதில்லையா? அப்போதல்லவோ உயிர் உண்டாகும்.

பாவியான ஸ்திரீ, தன் பாவ பாரத்தினால் இயேசுவினிடம் ஒரு வார்த்தையும் பேசமுடியாமல், கண்ணீரினால் அவர் பாதத்தை நனைத்து, ஓயாமல் முத்தமிட்டுக் கெஞ்சினதைக் கர்த்தர் கண்டு அவளுடைய மிகுதியான வாஞ்சையினிமித்தம் அவளை ரட்சித்தாரே!

சகோதரனே! இந்தியா, இலங்கையின் பாவ பாரத்தின் அகோரத்தை நீ உணர்ந்து, அதின்மேல் மிகுதியான அன்பு வைத்ததுண்டா? இந்நாடுகளுக்காக இயேசுவின் பாதத்தைக் கண்ணீரால் நனைத்ததுண்டா? அவர் பாதத்தை ஓயாமல் முத்தஞ்செய்து கெஞ்சினதுண்டா?

இந்தியா, இலங்கைக்காக உனக்கு இருக்கும் வாஞ்சையையே கர்த்தர் உன் ஜெபமாக அங்கீகரிப்பார். உன் வாஞ்சை எவ்வளவு?

VI. உண்மையான ஜெபம் எது?

கிரியையில் விளங்கும் ஜெபமே உண்மையான ஜெபம். கிரியையில்லாத ஜெபம் வெறும் ஜெபம்; உண்மையற்ற ஜெபம். ஒருவன் உண்மையுடன் ஜெபித்தால் கிரியை செய்யாதிருக்கமாட்டான். சிலர், 'லேசாய் ஜெபித்துவிட்டு சும்மாயிருக்கலாம்' என்று எண்ணுகிறார்கள். இது கூடாது. மரண அவஸ்தையிலிருக்கிற ஒருவனுக்கு மருந்து கொடாதிருப்பார்களா? அப்போஸ்தலர் ஜெபித்தார்கள். கிரியையும் செய்தார்கள். பவுல் ஜெபத்தில் போராடினான் கிரியையும் செய்தான். துன்பத்தைச் சகித்தான். இரத்தச்சாட்சியாயும் மரித்தான்.

ஜெபிக்கிறவனே கிரியைசெய்யவும் ஏற்றவன். வாஞ்சிக்கிறவனே கிரியைசெய்யவும் தேவனால் தகுதியாக்கப்படுவான். மரண பரியந்தம் உண்மையாயுமிருப்பான்.

சகோதரனே! நீயும் இந்தியாவின் குணப்படுதலுக்காக கர்த்தருடன் சேர்ந்து கிரியைசெய்ய ஆயத்தமா? துன்பம், அவமானம், மரணம் நேரிட்டாலும் உண்மையாய் நின்று ஊழியஞ் செய்வாயா? அப்படியானால் உன்னையே ஆவியினால் அபிஷேகித்து ஆத்துமாக்கள் உயிரடைய கர்த்தர் உபயோகிப்பார். மகிமையின் கிரீடத்தையும் பெறுவாய்.

VII. ஜெபஞ் செய்ய ஏவுவதென்ன?

'நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் தேவன் நமக்குச் செய்ய வல்லவர்.' பிள்ளை கேட்பதிலும் பெற்றோர் அதிகம் செய்வதுபோல, மனுஷராக நாம் கேட்பவைகளை தேவனாக அருளுவார். ஆகையால் நாம் தைரியங்கொண்டு கெஞ்சக்கடவோம்.

பின்னும் 'நாம் எதைக் கேட்டாலும்' கர்த்தர் செய்ய ஆயத்தமாயிருக்கிறார். அவருடைய நாமம் ஒன்றே மகிமைப்படவேண்டும் என்று யார் விரும்பி 'எதைக் கேட்டாலும்' கர்த்தர் அருளுவது அவர் இயல்பு. திருஷ்டாந்தமாக எலியா மழை பெய்யாதிருக்கவும்,

வானத்திலிருந்து அக்கினி வரவும், பின்பு மழை பெய்யவும் 'கருத்தாய் ஜெபம்பண்ணினான்.' கர்த்தர் நிறைவேற்றினார். ஏனென்றால் அவன் கர்த்தருடைய நாமத்தின் மகிமைக்காக மிகவும் வைராக்கியங்கொண்டு கேட்டான். பெற்றுக்கொண்டான். இக்காலத்திலே அவர் நாமத்தின் மகிமை ஒன்றையே விரும்புகிறவர்கள் கொஞ்சம். அவர் மகிமைக்காகத் துணிந்து ஏதாவது கேட்பவர்கள் அதிலும் கொஞ்சம். கேட்கக்கடவோம். 'அப்போது நமது சந்தோஷம் நிறைவாயிருக்கப் பெற்றுக்கொள்வோம்.' அதினால் தேவநாமமும் மகிமைப்படும்.

AN ANSWER TO PRAYER

ஜெபத்தின் பலன்

அநேக வருஷங்களுக்கு முன்னே ஒரு பக்தியுள்ள ஒரு சிறு குடும்பமிருந்தது. அந்தக் குடும்பம் அதிக தேவபக்தியும் ஜெப வாஞ்சையுமுள்ள குடும்பம். சில காலங்கள் சென்றபின் அந்தக் குடும்பத்துக்கு ஆதாரவாயிருந்த எஜமான் தன் மனைவியையும் பிள்ளைகளையும் விட்டு மறுமைக்குட்பட்டார். குடும்ப போஷிப்புக்கு அதிகமான சாதனங்களில்லாவிடினும் விதவைகளையும் திக்கற்ற பிள்ளைகளையும் விசாரிக்கிற தேவன் அக்குடும்பத்தை அற்புதமாய் ஆதரித்துவந்தபடியினால் அந்த விதவையான துரைசானியின் ஜீவியம் தேர்ந்த பக்தியிலும், ஜெப வாஞ்சையிலும் அதிகமதிகமாய் வளர்ந்து கொண்டே வந்தது. வேதத்தின் மகத்துவத்தைப்பற்றியும், ஜெபத்தின் வல்லமையைப்பற்றியும் தன் பிள்ளைகளோடு அடிக்கடி வற்புறுத்திப்பேசி அவர்களை தேவதாபக்தியில் வளர்த்து வந்தார்கள். ஒரு கிறிஸ்மஸ் காலத்தில் அவர்கள் குடும்பத்தில் அதிக கஷ்டங்கள் நேரிட்டன. தரித்திரமும் அதிகரித்தது என்றாலும் அவர்கள் தேவனோடு வசிப்பதை மறந்துவிடவில்லை. சிறுபிள்ளைகளுக்குப் பொதுவாக வீட்டின் வருத்தங்கள் அதிகம் தெரிகிறதில்லை. அந்தத் துரைசானியோ ஆண்டவரிடத்தில் தன் குறைவை அறிவித்து வந்தார்கள். இன்னமும் கஷ்டங்களுக்கு முடிவு வரவில்லையாதலின் அதிகமான மனச்சஞ்சலமிருந்தது. குடும்பத்தின் பாரத்தை உணர்ந்தவர்களுக்கு, குடும்ப நிர்வாகத்தில் அதிகக் கவலை உண்டென்பது எல்லோருக்கும் தெரிந்த காரியம்தான். கிறிஸ்மஸ்தினம் வரும்போது அநேக வீடுகளில் சந்தோஷமும் எக்களிப்பு முண்டாகிறது. ஸ்திதிவந்தர்கள் வீடுகளில் உலக உல்லாசங்களும் உலகத்துக்கான சந்தோஷங்களு

மிருக்குமென்பதை யாரைக் கேட்கவேணும். இப்படிப்பட்ட தினங்களில் இரட்சிப்பைத் தியானிப்போரும் மகிமையின் தேவன் மாங்கிஷத்தில் வெளிப்படும்படியான தன்மையானதற்கு காரணமான தன்தன் பாவத்தை யுணருகிறவர்களும் மெத்தக் கொஞ்சப்பேர்தான். நமக்கு வெளிப்பட்டாரே மற்றப் புறமதஸ்தர்களுக்கு இந்த மாட்சிமையான விசேஷத்தை வெளிப்படுத்தவேண்டுமே, அதுதானே சந்தோஷத்திலும் சந்தோஷம் என்று உணர்ந்து தன் சரீரத்துக்கான இன்பங்களைத் துறந்து வெளியே சென்று இரட்சிப்பை அறிவிக்கிறவர்கள் மெத்தச் சொற்பமானபேர்தான். மாயாபுரி சந்தைபோலாக்கி பட்டுப் பட்டாடைகளை வாங்குவதிலும் சிறந்த நகைகளை அணிவதிலும் சம்பிரமமான உண்டிகளைச் சமைத்து சாப்பிட்டு நிர்விசாரமாய் ஜீவிப்பதிலும் காலத்தைக் கழிக்கத் தலைப்பட்டிருப்பவர்கள் அநேகமாயிருக்கிறார்கள். இருதய உணர்வே சரியான பண்டிகை. அக்காலங்களில் மற்றவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதே மேலான சந்தோஷம். இந்தத் துரைசானி அந்த தினத்திலே அதிகமாக ஜெபித்தார்கள். வேதத்தை வாசித்து அதில் அமைந்திருக்கும் திருச்சத்தியங்களைத் தன் சிறு பிள்ளைகளுக்குப் புகட்டினார்கள். ஆனால் சிறு பிள்ளைகளுக்கு அவ்வளவு ருசிகரமாயில்லை. தங்கள் தாயாரைப் பார்த்து அம்மா, எல்லாருடைய வீட்டிலும் எவ்வளவோ ஆரவாரம், சந்தோஷம், புசிப்புக்கான நல்ல பண்டங்களுமிருக்கின்றன; நம்முடைய வீட்டிலோ இவையொன்றுமில்லாமல் வெறும் வேதம் வாசிப்பதும் ஜெபிப்பதுமாயிருக்கிறோமே, இதென்னவென்று கேட்டார்கள். அப்பொழுது அந்தத் துரைசானி தன் பிள்ளைகளைப் பார்த்து கர்த்தரோடு ஐக்கியப்பட்டிருந்தால் நமக்கு ஒன்றும் குறைவில்லை, தேவனுக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லி தன் பிள்ளைகளையும் ஜெபிக்கும்படி ஏவினார்கள். ஆனால் பிள்ளைகள் அவர்களை மனதில் பரிகாசம்பண்ணத் தொடங்கினார்கள். அந்தத் துரைசானி அந்நாளில் அநேக மணிநேரங்களை ஜெபத்திலே கழித்தார்கள். பிள்ளைகளோ மனதிலே கேலி பண்ணினார்கள்.

சாப்பாட்டு வேளையிலே ஒரு மனிதன் தன் தலையில் ஒரு கூடையை வைத்துக்கொண்டு தீவிரமாய் இவர்கள் வீட்டுக்கு நேரே வந்தான். எங்கே போகிறானோ என்று நினைத்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவன் தன் தலையிலிருந்த கூடையை இறக்கி எடுத்துக்கொள்ளுங்கள், நான் இன்னும் சில இடங்களுக்குப் போகவேண்டுமென்று அதி வேகமாய்ப் போய்விட்டான். அந்தக் கூடையைத் திறந்துபார்த்தால் உச்சிதமான தின்பண்டங்களும் சமைக்கப்பட்ட கற்சுவைபொருந்திய சாப்பாடும் அதிலிருந்தன. உடனே

தன் பிள்ளைகளைக் கூப்பிட்டு கர்த்தரை நோக்கி ஜெபித்து ஸ்தோத்திரம் செலுத்தி நன்றாய்ச் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். அப்பொழுதுதான் அந்தப் பிள்ளைகள் கர்த்தரை நம்புவதினாலுண்டாகும் பலன் இன்னதென்று அறிந்து தேவபக்தியாய் நடக்கத் தலைப்பட்டார்கள்.

அந்தப் பட்டணத்திலுள்ள ஒரு பிரபு அந்த குடும்பம் மகா ஏழைக்குடும்பமென்றும் அந்தத் துரைசானி அதிகப் பக்தியுள்ளவர்களென்றும் அறிந்து அநேகம்பேருக்கு நன்கொடைகள் அனுப்பினதோடு இந்த அம்மாளையும் நினைத்து அனுப்பினார். இந்த அம்மாளுக்கு இருந்த பக்தியும் விசுவாசமும் குடும்பத்திலும் வெளியிலும் தெரிந்திருந்ததுபோல் மாதர்கள் தங்கள் பிள்ளைகளுக்கும் மற்றவர்களுக்கும் முன் தேவபக்தியும் விசுவாசமுமுள்ளவர்களாய் ஜீவிப்பார்களானால் உலகத்துக்கு எவ்வளவு அளவிறந்த நன்மை பிறக்கும். கிறிஸ்தவ குடும்பத்தில் ஒவ்வொரு தாயும் தன் பிள்ளைகளுக்கு முன் மாதிரியாயிருக்கவேண்டும். அப்பொழுது அந்தக்குடும்பத்தில் தேவாசீர்வாதம் இருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

V. D. Kailasam.

PRAYER FOR GOD'S GRACE

தெய்வ கிருபைக்காக வேண்டல்

பல்லவி

எளியேன் எனக்குன்றனருள் அளியேன்—உனை
என்றும் தாரகமாய்க் கொண்டிடுமெவனும்— எளியேன்.

அநுபல்லவி

ஒளியேன் உனக்கென்றன் நிர்ப்பந்தத்தை
ஓதும் துணை இல்லையே பெரும்
பேதை நான் அலையோவரும்— எளியேன்.

சரணங்கள்

பெற்றதாயிடம் பிள்ளையேகிடாது பின்னெவர்பால் ஏகும்—நாளும்
பேணும் வைத்தியனிடமலது பிணியாளன் எவண்போகும்
மற்றும் தாமரை சூரியற்கல்லாது மலர்ந்திடுவதேது—உயர்
வான் விருட்சமும் தண்ணீரலால் வெந்நீரால் வளர்ந்திடுமோ ஓது

உற்றநின் கிருபையில்லாவிடில் ஐயா
ஓதும் அமுதமும் நஞ்சமதாம் பொய்யா
முற்றும் சூரியகிரணம் இன்றி நையா
முந்நீர் புடைதாங்கும் புவி
என்னும் இடையேங்கும் பவி— எளியேன்.

அத்தனேயான்பிழையெத்தனை செய்யினும்சுத்திசெய்தல்நேரே-எனை
ஆண்டவன் பிள்ளை யிவனிவனு மென்றண்மி யேசுவாரே
தத்தும் நீர்சூழ் புவிதன்னிலுன் மகிமை தாழ்வுறாமல் பாரே—நல்ல
தக்கார் தகவிலா ரென்பதவரவர் மக்களாலென்றுரே

எத்தன் நானுன்பிள்ளை என்றே யெழில்நாதா
இவ்வுலகனைத்துமே தெரியாதா
பத்தம் வைத்தென்னை யிரட்சிக்கவே வாதா
பாழில் வெந்துயரில் படும்
ஏழை கண்ணயரில் கெடும்— எளியேன்.

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1919-௵ ஜூன்௴

1 ஞா.	அப்.	2.	14—24	11 பு.	அப்.	5.	33—42	21 ச.	அப்.	9.	17—31
2 தி.	,,	2.	25—36	12 வி.	,,	6.	1—15	22 ஞா.	,,	9.	32—43
3 செ.	,,	2.	37—47	13 வெ.	,,	7.	1—16	23 தி.	,,	10.	1—16
4 பு.	,,	3.	1—10	14 ச.	,,	7.	17—29	24 செ.	,,	10.	17—33
5 வி.	,,	3.	11—26	15 ஞா.	,,	7.	30—43	25 பு.	,,	10.	34—48
6 வெ.	,,	4.	1—12	16 தி.	,,	7.	44—60	26 வி.	,,	11.	1—18
7 ச.	,,	4.	13—22	17 செ.	,,	8.	1—13	27 வெ.	,,	11.	19—30
8 ஞா.	,,	4.	23—37	18 பு.	,,	8.	14—25	28 ச.	,,	12.	1—12
9 தி.	,,	5.	1—16	19 வி.	,,	8.	26—40	29 ஞா.	,,	12.	13—25
10 செ.	,,	5.	17—32	20 வெ.	,,	9.	1—16	30 தி.	,,	13.	1—12

C. L. S. PRESS, MADRAS—1919